T-UN-196



ஸ்ரீ ராமஜெயம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,


உடையார்பாளையம் வட்டத்தைச் சார்ந்த

# கல்லங்குறிச்சி

# ஸ்ரீ கலியுகவரதராஜப்பெருமாள் கோவில்

# வரலாறு.

## ஸ்ரீ கலியுக வரதராஜப்பெருமாள் கோவில்.



மூலவர் ஸ்ரீ கலியபெ

ஸ்ரீராமஜெயம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தைச்சார்ந்த

கல்லங்குறிச்சி

# ஸ்ரீ கலியுக வரதராஜப்பெருமாள் கோவில்

# வரலாறு.



உற்சவர் ஸ்ரீ வரதராஜப்பெருமாள்.

இஃது ஆதீன தர்மகர்த்தா

க, பழனிமுத்து படையாட்சி அவர்களால்,

அரியலூர் ஜனோபகார அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது. 1954.

(தேவஸ்தான வெளியீடு)

உரிமை தர்மகர்த்தா அவர்களுக்கு

ஸ்ரீராமஜெயம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

உடையார்பாளையம் வட்டத்தைச் சார்ந்த

கல்லங்குறிச்சி

# ஸ்ரீகலியுக வரதராஜப் பெருமாள் கோவில்

# வ ர லா று.

——[ ]——

**நேரிசை வெண்பா.**

கல்லங் குறிச்சியுறை கம்பப் பெருமான்றன்
நல்லடியைப் போற்றுவர்தாம் நாடோறும்—செல்வந்தான்
பெற்றிடுவர் சீர்மிகுந்தே பேருலகில் வாழ்ந்தினிதா
யுற்றிடுவ ரென்றே யுணர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்துள்ள உடையார்பாளையத்தைச் சார்ந்த **சிதள-வாடி** யென்னுஞ் சிற்றூர்க்கண் இற்றைக்குச் சற்றேறக்குறைய நூற்றெழுபது ஆண்டுகளுக்குமுன் வன்னிய குலத்துதித்த கோபால படையாட்சியா ரென்பாரொருவர் வாழ்ந்து வந்தார். இவர் வறுமையால் அல்லலுற்றமையின் கடுகூர் கிராமத்திலிருந்த தனதுதாய் மாமன் ஊர்க்கண் உறைவாராயினர். சின்னுளானபின் இவர் உலையா ஊக்கமும், சலியா உளமுங் கொண்டு ஊர்க்கருகிலிருந்த காடுகளை வெட்டித் திருத்தி உழுது பயிரிடத்தக்க நிலையில் பண்படுத்தினர். அந்நிலத்தோர்பால் தனக்கென ஒரு இல்லம் அமைத்து நற் பண்புடன் தாளாண்மை மிக்க வேளாண்மையினை இனிதுற நடத்தி வந்தார். அவ்வேளாண்மையினைப் பண்ணையாள் கொண்டு நடத்த வேண்டியிருத்தலின் அவர்களுக்குஞ் சிறுசிறு வீடுகள் அவ்விடம் அமைத்துத் தந்துளார். இவ்வாறு வீடுகள் பல உண்டாக்கவே அவ்விடம் ஒரு சிற்றூராகத் திகழ்ந்தது. இங்கு இவர்தம் உறவினர்களும் குடியேறினர்கள். வாழ்ந்து வந்த மக்கள் இவ்வூருக்குக் "**கோபாலன் குடிக்காடு**" எனப் பெயரிட்டு வழங்கலாயினர்கள். (இன்றும் கோப்பிலியங் குடிக்காடு எனுந் திரிபுடன் வழங்கிவரும் இவ்வூரின்கண் மேற்படியாரின் குலத்தவர்களே வசித்து வருகிறார்கள்)

**கோபாலன் குடிக்காடு என்று பெயர் வந்த காரணம்**

இங்ஙனம் தனது இல்லத்தில் இல்லாளுடன் மனையறத்தை மாண்புடன் நடத்திவந்த கோபால படையாட்சியாருக்கு **"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன் நன்கல நன்மக்கட் பேறு"** என்று அறத்தின் திறத்தினை முறை பெறக்கூறிய வள்ளுவன் தன் வாய்மொழிக் கிணங்க ஆண்மகவு பிறந்தது. அம் மகவிற்கு மங்கான் படையாட்சி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். இம்மங்கான் என்பவர் தனக்குத் தக்க பருவம் வந்துற்றதும் மணமது புரிந்து வாழ்க்கையினைச் செம்மையுற நடத்துவாராயினர். இவருக்கு ஆக்கள் மிகுந்த மந்தை யொன்றுண்டு. அம்மந்தைக்கண்ணுள்ள ஆக்களுள் தலைமைப் பெற்றதும், எழில் மிகக் கொண்டதும், நிறைவுற்ற கருவுடனே இருக்கப் பெற்றதுமான **ஆ** வொன்று மேய்ந்த விடத்தில் காணுமற் போய்விட்டது.

**மங்கான் தோற்றம்**

கண்ணெனப் போற்றிவந்த அக்கருக்கோள் **ஆ** காணுமற் போகவே அதனை யறிந்த மங்கான் மூன்றுநாள் முழுதும் தேடியும் பலவிடங்களில் காணப் பெருமையின் அளவிலாத் துயர்க் கடலி லாழ்ந்தவராவர். ஊண் உறக்கமின்றி உளம் பதறி நின்ருர். மூன்ரும் நாள் இரவு உறங்குமிடத்து அவர் கனவிலே ஒளிவிடும் மேனியில் உயர்தவச் சால்பெலாம் விளங்கிடு மொப்பற்ற அருள்வடிவு கொண்டருளிய பெரியார் ஒருவர் தோன்றி "**அன்ப! கவலற்க**; நினது **ஆவைத்** தனது புனிற்றிறங் கன்றுடனே மேற்புறமுள்ள வனந்தனில் இரண்டு கல் தொலைவிலுள்ள பேரால மரத்திற்கும் மாவிலிங்க மரத்திற்கு மிடையே சங்கம் புதர்க்கண் எனது அருட் காவலில் வைத்திருக் கிரும். நீ வைகறையே சென்று காண்பாயாக" வென்று நவின்றருளி மறைந்தனர்.

**ஆவின் மறைவும் இறைவனின் தோற்றமும்,**

ஆவலினுல் பொழுது புலர்வதைப் பெரிதும் எதிர்பார்த்திருந்த மங்கான் படையாட்சியார் கதிரவன் தோன்றியதும் தனது பணி யாட்களுடன் சிறப்புறு கருவிகள் பல எடுத்துச் சென்று காடுபுக்கு நடைவழி செய்து பெரியார் குறிப்பிட்ட இடமது அடைந்து நோக்கியபோழ்து மங்கான் படையாட்சி யாரைக் கண்ணுற்ற அப்பசுவானது "**அம்மா அம்மா** வெனக் கதறிக்கொண்டு ஓடி வந்தது "**அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ்**" என்பதற்கிணங்க ஓடிவந்த **ஆ** இவரது இரு கரங் களையும் மோந்து நின்றது.

**காணுமற் சென்ற ஆ வெளிப்படல்.**

இளங் கன்றுடன் ஆவைக் கண்ணுற்ற அவர் அளவிலா மகிழ்ச்சி யெய்தினுர். அப்புதர்க்கண் சாய்வுற்றிருந்த கம்ப மொன் றினையும் அதன்மீது பால் சோரியப் பெற்ற பான்மையினையு மவருற்று நோக்கினுர். அந்தோ! இதுவென்! என்று உளம் உருகினுர். கம்பப் பெருமானைத் தொட்டு வணங்கினுர். "உலகத்தார்கட்கெல்லாம் அருட் சோரிந்து காக்கும் அண்ணலே"! உனக்கு இப்பசு தன் பாலைச் சோரிந்து வழிபட்டிருக்கும் பான்மைதான் என்னே! மூன்று நாள்காறு மெனது ஆவையும் அதன் கன்றினையு மோம்பி யென் பால் தந்தருளிய உன்றன் வான்கருணைக்கு யான் வழிவழி ஆற்றுங் கைம்மாறுதான் என்னே! இவ்வமயம் யான் வணங்குவதன்றி வேருென் றறியேனும்பால், என்றுகூறி இருகை குவித்துக் கண்ணீர் மல்க மனமுருகத் துதித்து வணங்கினுர். பிறகு பசுவையுங் கன்றையும் உடனழைத்துச் சேன்று இல்லம் புக்கார்.

**கம்பப் பெருமான் தோற்றம்.**

ஆகூழெய்தப் பெற்று நற்பயனடையு மொருவர் போன்று ஆவைப் பெற்றுவந்த இவருக்கு ஏழாம் நாளிரவு மீண்டும் அவர்தம் கனவில் அப்பெரியார் தோன்றி "எண்ணுயிரங் கோடியாண்டு யோக முற்றிருப்பாரு மெளிதிற் காணற்கரிய ஒரு பெரும் போருள் நேரில் காணப் பெற்றும் தொட்டு வணங்கிவிட்டு வந்த பேதையே! உன் அறியாமை நன்று! நன்று!! உன் கைப்போருள் மட்டும் உடன் கோண்டாய். அப்புதர்க்கண்ணிருந்த என்னை கைவிட்டாய், போய்ப்போருள் விழைந்தனை, மெய்ப்போருள் விடுத்தனை. என்னே உன் அறியாமை. மேலும் இந்நாள்வரை என்னைச் சிறிதும் எண்ணு தொழிந்தாய். அன்பனே! இனி வாடற்க! எனது அருளுருவக் கம்பத்தை நிலை நிறுத்தும் உரிமை உன்னுடையதே. நாளையே நன்னுள். கம்பத்தை யெடுத்து நிலை நிறுத்தி நாடோறும் வழிபாடாற்றி வருவாயாக. என்னை உற்றுணரவே உன் ஆவை மறைத்து வைத்துப் புரந்தேன். உன்னையும் உனது வழித்தோன்றல் களையும் காக்கக் கருணை கோண்டவன் யான் என்பதையும் அறி வாயாக. மேலும் கலியுகத்தார் தம் கவலையை ஒழிக்கவே இங்ஙனம் தோன்றினேன். என் பெயர் "**கலியுகப் பெருமான்**" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர்.

**கம்பப் பெருமான் மங்கானுக்கு அறிவுறுத்தியவை.**

விழிப்புநிலை யெய்திய மங்கான் படையாட்சியார் கூடுருேணுதவுவகை கோண்டு போழுது புலர்வதையே கண்ணுற்று இருள் நீங்கியவுடன்

மருள சிறிதுமின்றி கருவிகள் கொண்டு காட்டினுள் நுழைந்து ஆவல் பிடர் பிடித்து உந்த ஓடினர். கண்கண்ட தெய்வமாத்திகழ திருக்கம்பத்தைக் கட்டித் தழுவினர். உளம் பூரிக்க உடம்பெலாம் மயிர்க் கூச்செறிக்க நாத் தழுதழுத்து யாதொன்றுஞ் சொல்லொணுது பரவச நிலை யடைந்தார். பின்னர் நினைவு வரப்பெற்ருர். மனந் தூய்மை யுடன் இடந்தூய்மை செய்து திருக்கம்பத்தை யெடுத்து நிலை நிறுத்தினர். அப்பெருமானுக்குப் பாலிட்டு நீராட்டினர். மலர் சூட்டினர் அமுதளித்து கரங்கூப்பி "கலிநீக்க வந்தருள் கலியுகப் பெருமானே! உன்னைப் போற்றிப் பரவ என் நா எழவில்லையே, யாது செய்வேன் கோதிலாக் கடவுளே! குற்றமே புரிந்துளேன் நும்மாட்டு. முற்றறிவுடையீர்! சிற்றறிவுடையேன் தவறைப் பொறுத்தருள்வீராக. என்றன் பிழையினை யுணர்த்தி என்னையு மாட்கொண்டாய். உமது திருவருளை எண்ணி எண்ணி இறைஞ்சுகின்றேன். "கவலைப்படாமல் என்னை நம்பி வழிபடு; நான் காப்பாற்றுகிறேன்" என்று அன்றொருநாள் விசயனுக்கு உரைத்துக் காத்ததுபோல் இன்று என்னையுங் காத்து நின்ருய். உன்னை மறந்திடுவனே! மறப்பறியேன். இன்று முதல் உன்னையன்றி வேறெத்தெய்வமும் வழிபடேன். இதுவே உறுதி யானும் என் வழித்தோன்றல்களும் உன்னையே எக்காலமும் வழிபடுவோம்" என்று உறுதிமொழிந்து கண்ணீர் வார்த்து வணக்கஞ் செய்தார். பிறகு அவர் மட்டற்ற மகிழ்ச்சியுடையவராய்த் தனது இல்லம் சென்ருர்.

**மங்கான் தன் தவறுணர்ந்து வழிபடல்.**

சென்ற அவர் தன் கிளைஞரையும் மற்றுமுள்ளாரனைவரையும் தன்பாலழைத்து அவர்களிடம் தான் கண்டுள்ள கம்ப வடிவத்தின் மாண்பினையும், அருளாற்றினையுங் கூறினர். இக்கம்பம் கண்கண்ட தெய்வம் என்பதனை யான் உணர்ந்தேன். நீங்களும் அவ்வாறு உணருங்கள். உணர்ந்து என்றும் வழிபாடாற்றுங்கள் எனறு அறிவுறுத்தினர். இதனைக்கேட்ட அனைவரும் அவ்வண்ணமே அன்புடன் நாளும் வணங்கி நற்பேறெய்தி வந்தார்கள்.

**இறைவனருளாற்றலை அனைவருக்கும் அறிவித்தல்**

அதன்பின் மங்கான் படையாட்சியார் தனது உரிமைப் பொருளைக் கொண்டு பெருமானுக்கு மூலமண்டபம் மகா மண்டபம்

இன்ன பிற கட்டுவித்தார். சிறப்புற்ற நாட்களில் அவர் பெருமானுக்குத் தன் நிலத்து விளைந்த நல்ல தினைகொண்டு பொங்கலிட்டுப் படைப்பதுண்டு. நாடோறும் இவர் வழிபாடாற்றுவதில் சிறிதுந் தவறுர். இறைவன்பால் தான் தந்துள்ள உறுதி மொழியினை நிறைவேற்றும் பொருட்டு வழிவழி வருவோருக்குமிச் செய்தியைத் தெரிவிக்குமாறு கூறி "பற்றுக பற்றற்முன் பற்றினை அப்பற்றைப் பெற்றுக பற்று விடற்கு" எனு மான்றோர் மொழியினை யுளங்கொண்டு பற்றற்றானடியைப் பற்றி நின்று "பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேராதார்" என்னுஞ் சீரிய மொழிக்கிணங்க பெயருக்கேற்ப என்றுமே மங்காத பெரும்புகழ் நிறுவிய மங்கான் படையாட்சியார் பெருமான்றன் நற்றுளடைந்து பேரின்பந் திளைக்கலுற்றுர்.

**மங்கான் இறைவன் மாணடி சேர்தல்**

இவருடைய திருமகனுர் நாராயாண படையாட்சியாராவர். இவர் தனது தாய் தந்தையர்கள் இறைவன் மாட்டு அன்பு செலுத்தி வந்ததிறத்தினை எம்மனேரு மேன்றேன்று முணரவேண்டியே அவர்களின் உருவத்தைக் கற்சிலைகளாக அமைத்து பெருமான் அண்மையிலேயே நிலை நிறுத்தி யிருக்கிறுர்.

**நாராயணன் பெற்றேர்க்காற்றிய நன்றி.**

இக்கோவிலின்கண், இம்முறையில் வழித்தோன்றல்களாய் வந்தவர்களே முதன்மையேற்று அறப் பாதுகாவலராகத் திகழ்ந்து அருங்கடனுற்றி வருகிறுர்கள். இதுவே இக்கோவிலைப் பற்றிய உண்மை வரலாருகும். விரிவான வரலாறென்றும் விரைவில் வெளிவரும்.

**வழி வழி வந்த அறப் பாதுகாவலர்.**

**கல்லங்குறிச்சி**
**18—2—54.**

**க. பழனிமுத்து படையாட்சி,**
**ஆதீன தர்மகர்த்தா.**